திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இப்போது அரிசனங்களுக்குத் தனிச் சங்கங்கள் செயல்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலைப்பகுதிக்கு பஸ் வசதி.

*வினா எண். 572—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப்பகுதிக்கு பஸ் வசதி கோரி அரசுக்கு ஜவ்வாது மலைவாசிகள் முன்னேற்றச் சங்கம் கோரிக்கை ஏதேனும் அனுப்பிவைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) ஆம்.

(ஆ) மக்களின் கோரிக்கைகளுக்கிணங்க ஆலங்காயத்திலிருந்து நெல்லிவாசல் நாடுக்கு, ஆண்டியப்பனூர், புதூர் நாடு வழியாக ஒரு மினி பஸ் விட ஏற்பாடு செய்யப்பட்டு தற்காலிக அனுமதி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. கூடிய விரைவில் இத்தடத்தில் மினி பஸ் ஒன்று விடப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அரசினுடைய அனுமதிக்காக இது எப்போது அனுப்பப்பட்டது? அரசு எப்போது அனுமதி வழங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இந்த மினி பஸ் விடுவதற்கு ஏற்கெனவே வி. கே. குப்புசாமி என்பவருக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அந்தக் கால கட்டத்திலே அவர் மினி பஸ் விடாத காரணத்தால் சையத் அன்வர் என்பவருக்கு 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ம் நாளன்று அனுமதி வழங்கப்பட்டது. சையத் அன்வார் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் நாளுக்குள் அவருக்குக் கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மினி பஸ் விடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அதற்குள் அவர்கள் விட்டுவிடுவார்கள் என்று போக்குவரத்துத் துறையினர் தெரிவித்திருக்கிறார்கள்.

1979 மார்ச் 30]

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, ஆலங்காயத்திலிருந்து நெல்லிவாசல் நாட்டிற்கு ஒரு மினி பஸ் விடப்பட்டிருக்கிறது. அதைப்போல ஆலங்காயத்திலிருந்து ஜமீனாமருதூருக்கும், ஆலங்காயத்திலிருந்து காவலூருக்கும் புதூர் நாட்டிற்கும், புங்கம்பட்டு நாட்டுக்கும் பஸ்கள் விட்டால் தான் சரியான முறையில் போக்குவரத்து வசதி கிடைக்கும் என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே அங்கே மினி பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா? அனுமதி வாங்கிக் கொண்டவர்கள், பஸ் விடாமல் இருக்கிறார்கள், அதைப்பற்றி அரசு கவனித்து யாருக்குச் சரியான தகுதி இருக்கிறதோ அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா? அது மட்டுமல்ல, ஆலங்காயத்திலிருந்து ஜோலார்பேட்டைக்கும், ஏலகிரி மலைக்கும் விட வேண்டுமென்ற கோரிக்கை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஒன்று கேட்டால்தான் ஒழுங்காகப் பதில் வரும்.

திரு. எம். ஏ. லத்தீப்: அது பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர், மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு தற்காலிக அனுமதி பெற்றவர்கள் ஒழுங்காகப் பேருந்துகள் ஓட்டுவது இல்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஓட்டாதவர்களுடைய உரிமம் ரதது செய்யப்படும் என்பதைத் தெரிவிதது்ச் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இப்போது மலைவாழ் மக்களுடைய நலனைக் கருதி இப்படிச் செய்கிறபோது தனியார்கள் நஷ்டம் வருகிறது என்ற காரணத்தால் வண்டி ஓட்ட மறுக்கிறார்கள். அந்த இடங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக அந்த மார்க்கங்களில் வண்டி விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): அது போன்ற வழித் தடங்களில் தனியார்கள் ஓட்ட மறுப்பார்களானால் அல்லது அவர்கள் கிடைத்த உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பார்களானால் அரசு அதிலே பஸ் விட தயாராக இருக்கிறது.